**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
***ஒ.எஸ்.89/2019***
**2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14-ம் நாள் புதன்கிழமை**

வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண். 44வது பிரிவு 6(1)ன்படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.எஸ்.செல்லபாண்டியன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தனிக்கொடி (எ) அரிகிருஷ்ணன் | சாதி | : |
| த-பெ | : | சமயம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | வயது | : |

**வா.சா.1** தனிக்கொடி (எ) அரிகிருஷ்ணன் **ஆஜர்.**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 1வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பில் பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. தாவாச்சொத்து அமைப்பு குறித்த மாதிரி வரைபடம் அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. 09.12.1971ம் தேதிய தாவாச் சொத்தின் வடபுறம் பகுதியை சுப்பிரமணியத்தேவர் வகையறாவிடமிருந்து வாதி ரிஜிஸ்டர்டு கிரையம் பெற்றதற்கான கிரையப் பத்திரம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. 21.02.1974ம் தேதிய தாவாச் சொத்தின் தென்புறம் பகுதியை சண்முகம், ராஜலெட்சுமி நாச்சியார், தங்கராஜ் ஆகியோர்களிடமிருந்து வாதி கிரையம் பெற்றதற்குரிய கிரையப்பத்திரம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 13.04.1989ம் தேதிய தாவா சொத்து குறித்து நத்தம் நிலவரி திட்ட தனி வட்டாட்சியரின் விசாரணை அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. 17.04.1989ம் தேதிய தாவா சொத்துக்கு நத்தம் நிலவரி திட்ட தனி வட்டாட்சியர் அவர்களின் நடவடிக்கைகள் (படிவம் -3) அசல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. தாவா சொத்துக்கு அரசின் நத்தம் நிலவரித்திட்ட தனி வட்டாட்சியரால் வாதி பெயருக்கு கொடுக்கப்பட்ட மனைவரி தோராயப்பட்டா அசல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. தாவா சொத்தில் வடபுறம் பகுதியில் ஓட்டு வாட்டத்துடன் கூடிய 1/92 கதவிலக்கம் கொண்ட வாதியின் தார்சு வீட்டிற்கு ஊராட்சியில் வாதி செலுத்திய வரி ரசீதுகள் (எண்ணிக்கை -7) அசல் **வா.சா.ஆ.7** ஆகும்.

8. தாவாச் சொத்தில் தென்புறம் பகுதியில் உள்ள 1/93 கதவிலக்கம் கொண்ட ஓட்டு வீட்டிற்கு ஊராட்சியில் வாதி செலுத்திய வரி ரசீதுகளின் (எண்ணிக்கை - 7) அசல் **வா.சா.ஆ.8** ஆகும்.

9. தாவா சொத்தில் தென்புறம் பகுதியில் உள்ள 1/92 கதவிலக்கம் கொண்ட தார்சு வீட்டிற்கு SC.No.35-ல் வாதி செலுத்திய மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.9** ஆகும்.

10. தாவா சொத்தில் தென்புறம் பகுதியில் உள்ள 1/93 கதவிலக்கம் கொண்ட ஓட்டு வீட்டிற்கு SC.No.88-ல் வாதி செலுத்திய மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.10** ஆகும்.

11. 21.05.2019ம் தேதிய தாவாச் சொத்துக்கு 01.01.1971 முதல் 01.12.1974 வரைக்கும் உரிய வில்லங்க சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.11** ஆகும்.

12. தாவா சொத்தில் உள்ள 1/92 கதவிலக்கம் உள்ள வீட்டிற்கு வாதி செலுத்திய வரி ரசீதுகள் (எண்ணிக்கை - 6) அசல் **வா.சா.ஆ.12** ஆகும்.

13. தாவா சொத்தில் உள்ள 1/93 கதவிலக்கம் உள்ள வீட்டிற்கு வாதி செலுத்திய வரி ரசீதுகள் (எண்ணிக்கை - 8) அசல் **வா.சா.ஆ.13** ஆகும்.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**District Munsif,**
**Manamadurai.**